Date. 07.07.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS.108/2017

**வா.சா. 1**

**பெயர். திருமதி.தேவி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ராஜாமணி உடையார் எனது தந்தை என்றால் சரிதான். இரண்டாம் பிரதிவாதி கோபாலகிருஷ்ணன் எனது தம்பி ஆவார். மூன்று முதல் ஆறு பிரதிவாதிகள் எனது சகோதரிகள் என்றால் சரிதான். எனக்கு 1992-ல் திருமணம் ஆனது. மற்ற சகோதரிகளுக்கு எப்போது திருமணம் ஆனது என்றால், ஒரு சகோதரிக்கு எனக்கு திருமணம் ஆகி ஒன்றரை வருடம் கழித்து திருமணம் ஆனது. மற்றொரு சகோதரிக்கு எப்போது திருமணமானது என்று எனக்கு ஞாபகம் இல்லை. குறிப்பாக சொல்ல முடியாது. எங்கள் அனைவருக்குமே எங்களது அப்பா உடனிருந்துதான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். 1992-ல் திருமணம் ஆகிய பின்னர் நான் எனது கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை நான் எதற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்துக்களில் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளேன். பாகம் தவிர்த்து வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வழக்கிற்கான விவரங்களை யார் வழக்கறிஞருக்கு சொன்னார்கள் என்றால், நான்தான் சொன்னேன். வழக்கில் மொத்தம் எத்தனை அயிட்டம் சொத்துக்கள் உள்ளது என்றும், அந்த சொத்துக்களின் சர்வே எண் என்ன என்றும், விஸ்தீரணம் எவ்வளவு என்றும், எனக்கு தெரியாது.

எனக்கு அந்த அளவிற்கு படிப்பறிவு இல்லை. கடந்த 10/07/2006 தேதியில் எனது தகப்பனார் ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை (வா.சா.ஆ.2) எழுதிக் கொடுத்தார் என்றால், இல்லை. அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது தந்தை எத்திராஜ் நகர் விஸ்தரிப்பு மனை எண் -58 யை மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எனக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல் மற்ற பெண்களுக்கும், எனது தந்தை ஆளுக்கு ஒரு வீட்டுமனைகளை செட்டில்மெண்ட் ஆவணங்கள் மூலம் தனித்தனியாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் கொடுக்கப்பட்ட வீட்டுமனையை நான் விற்பனை செய்து விட்டேன் என்றால் சரிதான். எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட போது அந்த வீட்டு மனையின் மதிப்பு சுமார் ரூபாய் 5 லட்சம் மதிப்புடையது என்றால் இல்லை குறைவாகத்தான் இருந்தது. நான் அந்த வீட்டு மனையை ரூ.5,00,000/- க்கும் மேல்தான் விற்பனை செய்துள்ளேன் என்றால், குறைவான தொகைக்கு தான் விற்பனை செய்தேன். அதன் பின்னிட்டு 02/12/2006 தேதியில் எனது தந்தை மற்றும் எனது சகோதரர் ஆகியோர்களுக்கு நானும் மற்ற சகோதரிகளும் சேர்ந்து ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அது போன்று எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை. கடந்த 03/08/2010 தேதியில்(வா.சா.ஆ.3) எனது தகப்பனார், எனது சகோதரர் மற்றும் சகோதரிகள் ஆகியோருக்கு இடையில் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் இல்லை. அந்த பத்திரத்தை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் 12 பக்கங்களில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால், கையெழுத்து போட்டேன். என்னை ஏமாற்றி கையெழுத்து வாங்கி விட்டார்கள். எனக்கு திருமணம் செய்யும்போது, எனது தந்தை சுமார் 30 சவரன் நகைகள் போட்டு சீர்வரிசை செய்து சுமார் ஒரு லட்சம் செலவு செய்து திருமணம்

நடத்தி வைத்தார் என்றால், இல்லை. இந்த வழக்கில் நான் எனது அப்பா, தம்பி மற்றும் தங்கைகளை எதிர் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். பாகப்பத்திரத்தில் மொத்தம்

எத்தனை அட்டவணை சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், எனக்கு சரியாக தெரியவில்லை. பாகபத்திரத்தை காந்தி சிலை அருகே எங்கேயோ வைத்து தட்டச்சு செய்தார்கள். என்னிடம் ரோட்டில் வைத்து பத்திரத்தில் கையெழுத்து வாங்கி விட்டார்கள். நான் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு போய் ஒவ்வொருவரும் கைரேகை வைத்து விட்டு வந்து விட்டோம் என்றால் சரிதான். எங்களிடம் அங்கு எதுவும் கேட்கவில்லை. எங்களை உடனடியாக வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். நான் பத்திரம் எழுதும் காலத்தில், திருக்கோவிலூர் வட்டம், புத்தூர் கிராமத்தில் இருந்தேன் என்றால் சரிதான். ஜெயந்தி என்பவர் வெண்மணி ஆத்தூரில் இருந்தார் என்றால் சரிதான். ஞானேஸ்வரி என்பவர் ஆழியூரில் இருந்தார் என்றால் சரிதான். பிருந்தா என்பவர் விழுப்புரம் வட்டம் தும்பூரில் இருந்தார் என்றால் சரியல்ல அவர் விழுப்புரத்திலேயே எனது அப்பாவுடன் இருந்தார். அவருக்கு அப்போது திருமணமாகவில்லை. பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்போவதாக அனைவருக்கும் தகவல் சொல்லி, அனைவரிடமும் விவரங்களை தெரிவித்துவிட்டு, எழுதி முறையாக அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. அதன்படி ஒவ்வொரு பெண்களுக்கும் தலா ₹20,000 ரொக்கமாக கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. பாகப்பத்திரத்தின் படி சொத்துக்களை எனது தகப்பனாரும், எனது தம்பியும் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு வயது சுமார் 76 என்றால் தெரியவில்லை சுமார் 74 வயது இருக்கும். எனது தந்தை இரண்டு மாதத்திற்கு முன்பு சர்க்கரை வியாதியினால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொண்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றும், அவரது சிகிச்சைக்கு எனது தம்பி தான் ரூபாய் பத்து லட்சம் செலவு செய்தார் என்றால், பூர்வீக நிலத்தை விற்று தான் செலவு செய்துள்ளார். இந்த வழக்கில் என் அப்பாவும், தம்பியும், என்ன ஆட்சேபணை போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை

பத்திரம் உள்ளது என்ற விவரம் எனக்கு 2010 ஆம் ஆண்டிலேயே தெரியும் என்றும், காலம் கடந்து நான் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ளதால் வழக்கானது கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த பாகப்பிரிவினை

பத்திரத்தை ரத்து செய்வதற்கு நான் பரிகாரம் மூன்று வருட காலத்திற்குள் கோராததால், எனது பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை தான் வழக்கு சொத்துக்களாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன். அதுபோன்று நான் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கறிஞர் வைத்து அறிவிப்பு கொடுத்தேன். பாகப்பிரிவினையானது முறையாக எழுதப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்பதால் அது அமலுக்கு வந்துவிட்டது என்றும், இந்த விவரம் தெரிந்தும் அந்த ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**<u>இல்லை</u>**